THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி




***செப்டம்பர் 2022 (மடல் – 22) செய்தி - 8***

**"தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்; என் தேவனாகிய கர்த்தாவே என் இருளை வெளிச்சமாக்குவார்" (சங்.18:28).**

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 8 |
| Children's Corner | 12 |
| வேத வினாக்கள் | 22 |
| கோதுமை மணி | 26 |
| துணுக்குகள் | 28 |
| ஆலய பக்கம் | 30 |

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன். ஆண்டவருடைய பெரிதான கிருபையினாலே, இந்த ஆண்டின் எட்டு மாதங்களை நிறைவு செய்து ஒன்பதாவது மாதத்தை காண செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த மாதத்திலும் ஆண்டவர் தரும் நம்பிக்கையின் வாக்குத்தத்தம்:

**"தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்; என் தேவனாகிய கர்த்தாவே என் இருளை வெளிச்சமாக்குவார்" (சங்.18:28).**
**"You LORD, keep my lamp burning; My God turns my darkness into light (Psalms 18:28).**

நாம் வாழுகின்ற இந்த உலகம் நிலையானதாகவும், பாதுகாப்பு நிறைந்ததாகவும் இருப்பதில்லை. கவலையும், போராட்டமும், துன்பங்களும் நிறைந்தே காணப்படுகின்றன. இருளில் ஒளியின்றி பயணிப்பது எவ்வளவு கடினமோ, அது போலவே குழப்பங்களின் நடுவே பயணிக்கும் வாழ்க்கை பயணத்தில் இருளான அனுபவம் கடினமானது. தாவீது ராஜா கடவுள் தன்னை வழிநடத்தி வந்த நிலையை எண்ணி நம்பிக்கையுடன் கூறுகின்றார். கடவுளே என் வாழ்வுக்கு ஒளி. இருள் நிலையை மாற்றி ஒளியேற்றுவார் என்ற நம்பிக்கையோடுகூட இந்த புதிய மாதத்தை நாம் துவக்குவோம்.

**1. பாதை காட்டி ஒளியேற்றுகிறார்**

இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினி ஸ்தம்பமாக அவர்களுக்கு முன் சென்றார் (யாத்.13:21).

இஸ்ரவேல் மக்களின் வாழ்வில் எகிப்து நாட்டிலிருந்து விடுதலை பெற்றும் தங்கள் வாழ்வில் எல்லாம் சரியாயிருந்தது என்று இல்லை. பல பிரச்சனைகளையும், போராட்டங்களையும், சவால்களையும் சந்திக்க நேரிட்டது. எல்லா நிலைகளிலும் கடவுள் அவர்களோடு இருந்தார். ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நெருப்புத் தூணாய் இரவில் அவர்களுக்கு பாதை காட்டி வழிநடத்தி சென்றார்.

நாம் பயணிக்கும் இந்த புதிய மாதத்தின் பாதையிலும் பல போராட்டங்களும் பிரச்சனைகளும் வரலாம். ஆனாலும் கடவுள் நமக்கு பாதை காட்ட எப்போதும் ஆயத்தமுள்ளவராய் இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு முன் செல்வோம். ஏசாயா 48:17 "பிரயோஜனமாயிருக்கிறதை உனக்கு போதித்து, நீ

நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே" என்று கூறுகிறது. கடவுளே வெளிச்சமாகி நமக்கு பாதை காட்டுவார்.

**2. பாதுகாத்து ஒளியேற்றுகிறார்**

"எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன். தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று" (சங்.18:6).

தாவீது தன் வாழ்வில் வந்த எல்லா நெருக்கடியான சூழல்களுக்கும் தன்னை விலக்கிப் பாதுகாத்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் சங்கீதமாக 18-ம் சங்கீதம் இருக்கிறது. தொடர்ந்து யோபுவும் தன் துன்ப நிலையிலும் இறைவினால் பாதுகாக்கப்பட்டார். "அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்தது. அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துள்ளேன்" (யோபு 29:3). நம்முடைய நெருக்கமான சூழ்நிலைகளிலும் ஆண்டவர் பாதுகாத்து வழிநடத்துவார்.

கடவுள் நம்முடைய இன்ப நிலையில் மட்டுமல்ல, துன்ப நிலையிலும் நம்மோடு கூட பயணம் செய்வார். அவர் நம்மோடு இருக்கும்போது இருளான வாழ்க்கை சூழ்நிலைகளிலும் நம்மை பாதுகாப்புடன் வழிநடத்துவார். மத்தேயு 5:14-ல் சொல்லப்பட்டிருப்பது போல, நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். எனவே நாம் ஒளி வீசக்கூடியவர்களாகவும், பிறருடைய வாழ்விலும் ஒளியேற்றுபவர்களாகவும் இருக்க பிரயாசப்படுவோம். கடவுள் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : jerirajkumar@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
*அருள்திரு. ஜெர்ரி ராஜ்குமார்.* C

## போராட்டமும் கொண்டாட்டமும்



### விந்தை மாற்றங்கள்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்திலே அன்போடு கூட வாழ்த்துகிறேன். ஆண்டவரின் பெரிதான கிருபையினாலே எட்டு மாதங்களை கடந்து இந்த புதிய மாதத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளோம். அதுமட்டுமல்ல, நம்மில் அநேகர் கடந்த இரண்டு மாத விடுமுறையில் பத்திரமாக நம் தாய் நாட்டிற்கு சென்று வர நம் பயணத்தை ஆசீர்வதித்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

பிரியமானவர்களே, கடந்த மாதங்களில் எஸ்தர் புஸ்தகத்தைக் குறித்து அநேக காரியங்களை ஆவியானவரின் துணையோடு தெளிவாக தியானித்து வருகிறோம். இம்மாதம் 'விந்தை மாற்றங்கள்' என்ற தலைப்பில் எஸ்தர் புஸ்தகத்தை தியானிக்கலாம். ஆம் பிரியமானவர்களே இதுவரை நடந்த விஷயங்களில் அதிரடி மாற்றம் ஏற்பட்டது. திருப்பங்கள் நேர்ந்தது. சுவாரஸ்யமான காரியங்கள் நிகழ்ந்தது. தியானிக்கலாம் வாருங்கள்.

வெற்றி ஒரு பக்கத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்க, மற்றொரு பக்கமோ பீதியில் உறைந்து நின்றனர். சாவின் நாளை எண்ணிக் கொண்டிருந்தனர். இன்னொரு பக்கமோ விருந்தும், உபசரிப்பும் நடைபெற்று கொண்டிருந்தது. இந்த சூழ்நிலையில் திடீரென்று காற்று மாறி வீச ஆரம்பித்தது. விந்தை மாற்றங்கள் ஆரம்பமாயின. ஆம் பிரியமானவர்களே போராட்டம் கொண்டாட்டமானது. கொண்டாட்டம் போராட்டமானது.

### போராட்டம் கொண்டாட்டமானது

மரண பயத்தில் உறைந்திருந்தோர், மறுபடியும் என்ன செய்தி வருமோ என்று காத்திருந்தனர். முதல் நாள் ராணியின் விருந்தில் கலந்துகொண்டு பெருமிதத்துடன் வீடு திரும்பிய ஆமான், மனைவியுடனும், நண்பர்களுடனும் திட்டம் போட்டு உழைத்து ஐம்பது முழ உயரத்தில் தூக்கு மரம் செய்தான். எதிரியாய் நினைத்த மொர்தெகாயை ஆசை தீர கொலை செய்யும்படி ஏற்படுத்தப்பட்டது தூக்குமரம். தூக்குமரம் ஆயத்தமானதும் உத்தரவுக்காக அரண்மனை வந்தான் ஆமான்."ஆமான் தான் செய்த தூக்குமரத்திலே மொர்தெகாயைத் தூக்கிப்போட வேண்டுமென்று, ராஜாவிடத்தில் பேசும்படி ராஜ அரண்மனையின் வெளி முற்றத்திலே வந்திருந்தான்" (எஸ்தர் 6:4).

இம்முறை ஆசையாய் அனுமதி பெற வந்தவனுக்கு ராஜாவின் கேள்வி முந்திக்கொண்டது. ராஜா கனம் பண்ண விரும்பும் மனிதனுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது ராஜாவின் கேள்வி. ஆமான் இப்பொழுது பதில் கொடுக்க வேண்டும். கேள்வி வந்தவுடனே, என்னைத் தவிர ராஜா யாரை கனம் பண்ணுவார் என்ற எண்ணம் தோன்றி இருமாப்பு தலைதூக்கியது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். ராஜா கனம் பண்ணுகிற மனுஷனாய் தன்னையே

நிறுத்தி, தன் உள்ளத்தின் ஆசைகளையெல்லாம் வெளிப்படுத்தினான். உச்சிதமானவைகளைக் கேட்டான்.

"ராஜாவை நோக்கி, ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால், ராஜா உடுத்திக்கொள்ளுகிற ராஜ வஸ்திரமும், ராஜா ஏறுகிற குதிரையும், அவர் சிரசிலே தரிக்கப்படும் ராஜ முடியும் கொண்டுவரப்பட வேண்டும். அந்த வஸ்திரமும், குதிரையும், ராஜாவுடைய பிரதான பிரபுக்களில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப்பட வேண்டும். ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனை அலங்கரித்த பின், அவனைக் குதிரையின் மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாக கூறப்பட வேண்டும் என்றான்" (எஸ்தர் 6:7-9).

ஆசை ஆசையாய் சொல்லி முடித்தவனுக்கு அதிரடி உத்தரவு பிறந்தது. வாசல் முற்றத்தில் இருக்கும் என் உயிர் காத்த மொர்தெகாய்க்கு நீ சொன்ன அத்தனையும் தவறாமல் நிறைவேற வேண்டும். நிறைவேற்றும் பொறுப்பு உன்னுடையதே. நீயே என் நம்பிக்கை நாயகன். உன் கூற்றின்படி பிரதான பிரபுவும் நீயே என்று கூறி, 'நீ சொன்ன ஒன்றும் தவறாதபடி கவனமாய் பார்த்துக்கொள்' என்று அகாஸ்வேரு ராஜா கட்டளையிட்டார். கட்டளையை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் ஆமான் விழி பிதுங்கி நின்றான். ஆனால் ராஜாவின் கட்டளையாயிற்றே. மறுக்க முடியாமல் நின்றான். தூக்கு மரத்துக்கு உத்தரவு கேட்க வந்தவனுக்கு அவசர வேலைக்கான அழைப்பு. உத்தரவு கூட எதிரிக்குப் புகழாரம் சூட்ட வேண்டிய நிலை. என்ன வேடிக்கை பாருங்கள்! தான் கொலை செய்ய நினைத்தவனுக்கு தானே மரியாதை செலுத்த வேண்டிய கட்டாயம். அதுவும் தன் வாயினால் தனக்காக கூறியதை தன் எதிரிக்கு நிறைவேற்ற வேண்டும். காலரைத் தூக்கிக் கர்வமாய் அரண்மனை வந்தவன் முக்காடிட்டுக் கொண்டுத் திரும்பினான்.

"ஆமானோவென்றால் சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக் கொண்டு தன் வீட்டுக்குத் தீவிரித்துப் போனான்" (எஸ்தர் 6:12).

மரணநாள் நிச்சயிக்கப்பட்டவனுக்கு மரண நாளுக்குக் காரணமானவன் கையாலே மரியாதை. அவன் தலைமையில் நகர்வலமும் கூட. என்ன ஒரு விந்தை மாற்றம்! பிரியமானவர்களே, அநேக திருப்பங்கள், அநேக மாற்றங்கள் ஆண்டவரின் வழிநடத்துதலினால்.

தொடர்ந்து தியானிக்கலாம். ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் இம்மாதம் முழுவதும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

- **தொடரும்**

இப்படிக்கு
உங்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கும்
***திருமதி. ஏஞ்சலின் ஜெர்ரி ராஜ்குமார்***
**ஆயரம்மா**

## FELLOWSHIP - *கிறிஸ்தவ ஐக்கியம்* - *கிறிஸ்துவோடு ஐக்கியம்*

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்." (யோவா 17:21)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இருதயத்தின் வாஞ்சையை, பிதாவோடு பேசுகிற அருமையான ஒரு ஜெபத்தைத் தான் மேற்கண்ட வேத பகுதியில் நாம் வாசிக்கிறோம். தேவன் தம்முடைய பிள்ளைகள் தம்மோடு ஐக்கிப்படுவது மட்டுமல்ல ஒருவருக்கொருவர் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆகவே, கிறிஸ்தவ ஐக்கியம் என்பதை நாம் இரண்டு பகுதிகளாக தியானிக்கலாம். முதலாவது, கிறிஸ்துவோடு உள்ள ஐக்கியம், இரண்டாவது கிறிஸ்தவர்களின் அதாவது விசுவாசிகளின் ஐக்கியம்.

**கிறிஸ்துவோடு ஐக்கியம் :**

கிறிஸ்துவோடு ஐக்கியம் என்பது , ஆண்டவரில் நிலைத்திருப்பது. அவருடைய உறவை விட்டு பிரியாதிருப்பது. “என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்” (யோவான் 15:4). ஒரு மெய்க் கிறிஸ்தவனின் அடையாளம் அவரில் நிலைத்திருப்பது. யோவான் 8:31 -ல் “நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;” என்று சொல்லுகிறார். நாம் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மாத்திரமே கனிகளைக் கொடுக்க முடியும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்பொழுது, ஆவியின் கனிகள் நம்மில் காணப்படும். மெய்யான சமாதானம் காணப்படும்.

கிறிஸ்துவின் கட்டளைகளை கைக் கொள்ளும் போது தான் கிறிஸ்துவின் அன்பிலே நிலைத்து இருக்க முடியும். (யோவா 15:10) நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம். (1-யோவா.4:16) தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

நாம் அவரில் எப்பொழுதும் நிலைத்திருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் எப்பொழுதும் அவரையே பற்றிக்கொண்டு, அவரை நோக்கி ஜெபிக்க வேண்டும். நமது போக்கிலும், வரத்திலும் நம்முடைய பாரங்கள், சந்தோஷங்கள், ஸ்தோத்திரங்கள் எல்லாவற்றையும் அவரிடம் எடுத்துச் செல்லவேண்டும். அவருடைய மிகுந்த கிருபைகளை எண்ணிப்பார்த்து அதிகமான நன்றிகளை ஏறெடுக்க வேண்டும்.அவருடைய வார்த்தையைத் தியானிக்க வேண்டும். இது கிறிஸ்துவோடு உள்ள உறவில் ஐக்கியத்தில் நம்மை நிலை நிறுத்த உதவும்.

**கிறிஸ்தவ ஐக்கியம்** :

"நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:12,13). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் ஜீவனையே தந்து நம்மில் அன்பு கூர்நதது போல, நாமும் ஒருவரோடொருவர் அன்பாய் இருக்கவேண்டும் என்று ஆண்டவர் நமக்கு கற்பனையாக சொல்லுகிறார்.

கிறிஸ்துவில் வளர்வதற்கும், கிறிஸ்து (ஊழியம்) வளர்வதற்கும் கிறிஸ்தவ ஐக்கியம் இன்றியமையாததாய் இருக்கிறது. விசுவாசிகளுக்கு இடையில் ஐக்கியம் மிகவும் அவசியம். அப்போது தான் ஒருவரால் ஒருவர் தூண்டப்பட்டு, ஒருவரால் ஒருவர் புத்தி சொல்லப்பட்டு எல்லோரும், கிறிஸ்துவுக்காக வல்லமையாக எரிந்து பிரகாசிக்க முடியும். "சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல கடவோம்" என்று எபிரெயர்-10:25 ல் பவுல் அப்போஸ்தலர் சொல்கிறதை வாசிக்கிறோம் அல்லவா ? அடுப்பில் விறகு கட்டைகள் பல ஒன்றாக பிரகாசமாக எரிகிறது. அந்த கட்டையின் நெருப்பினால் தூண்டப்பட்டு எந்த கட்டை எரிகின்றது என்று சொல்ல முடியாது. எல்லாம் ஒன்றாக இருந்து எரிந்து கொண்டிருக்கின்றன. இப்போது அதில் ஒரு கட்டையை தனியே எடுத்து வெளியே போடுங்கள். என்ன நடக்கும்? கொஞ்ச நேரத்தில் அந்த கட்டையில் இருந்த நெருப்பு கொஞ்சம் கொஞ்சமாக அணைந்து அனல் இழந்து போகும். கிறிஸ்தவ ஐக்கியம் என்பதும் இதுபோன்றதே. ஒன்றாக இணைந்திருந்தால் எல்லோருடைய வாழ்விலும் கிறிஸ்துவை பற்றிய அனுபவங்கள் பிரகாசிக்கும் .

"அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்" (1யோ.1:7). இன்று நமது வாழ்வில் இருளின் கிரியைகள் அதிகரிப்பதற்கு ஒரே காரணம் ஐக்கியமின்மை. ஐக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காதபடிக்கு தந்திரமாக பிசாசானவன் வீசுகின்ற வஞ்சக வலைக்குள் நாம் சிக்கிவிடுகிறோம் . கடவுள் மனிதனை தன்னுடைய சாயலில் படைத்தார். கர்த்தர் இன்றும் அன்பாகவே இருக்கிறார் ஆனால் மனிதர்களாகிய நாமோ கடவுளோடும் சகமனிதரோடும் சுபாவ அன்பற்றவர்களாக மாறி விடுகிறோம். இந்த நிலையில் இருந்து மாறி கிறிஸ்தவ ஐக்கியத்தில் வெற்றிபெற நாம் என்ன செய்ய வேண்டும்?

ஒருவருக்கொருவர் அன்பில் தொடர்ச்சியாய் கடன்பட்டிருங்கள்" என்றே பவுல் புத்தி சொல்கிறார். அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் (1கொரி 13:4 - 7). நாம் ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிறோம் என்பது தேவனுடைய அன்பு நமக்குள் இருக்கிறது என்பது மட்டுமல்ல, அது நாளுக்கு நாள் நமக்குள்ளே பெருகி, வளர்ந்து, பூரணப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது.

எனவே, கிறிதுவோடு ஐக்கியம் கொண்டு, கிறிஸ்தவ ஐக்கியத்தில் இணைந்து அவரில் அன்பு கூர்ந்து, ஒருவரில் ஒருவர் அன்பு கூர்ந்து ...கிறிஸ்துவுக்கு ஒளிகொடுக்கிற பிள்ளைகளாய் வாழ ஆண்டவர் இயேசு தாமே நமக்கு அருள் செய்வாராக ..ஆமென் .


*கிறிஸ்துவில் அன்புடன்,*
**Jayachandra Raja**

## ஐக்கியத்தின் இரகசியம்

ஐக்கியம் என்பது சமாதானத்தின் மறுபக்கமாகும். நம் குடும்பத்தில் அனைவரும் சமாதானமாயிருக்க வேண்டுமெனில் குடும்பத்தினரிடம் ஐக்கியம் இருக்க வேண்டும். நாம் வசிக்கும் இடத்தில் சமாதானம் வேண்டுமெனில், அண்டை அயலகத்தாருடன் ஐக்கியமாய் இருக்க வேண்டும். வேலை செய்யும் இடத்தில் சமாதானம் வேண்டுமெனில், அங்கு பணி செய்யும் அனைவரிடமும் ஐக்கியம் இருக்க வேண்டும். நாம் தொழுதுகொள்ளும் ஆலயத்தில் சமாதானம் இருக்க வேண்டுமாயின், அங்கே ஆண்டவரை பணிந்து கொள்ள வரும் அனைவரிடமும் ஐக்கியம் இருக்க வேண்டும்.

ஆக, ஒரு நபருக்கு மேல் ஒரு இடத்தில் மக்கள் குடியிருக்கும்போது அல்லது கூடி இருக்கும்போது ஐக்கியமானது மிகவும் அவசியமாகிறது. கூடியிருக்கும் ஒவ்வொருவரும், ஆளுக்கொரு கோணத்தில் செல்வார்களானால் அங்கே குழப்பம் ஏற்படும். பிரச்சனையும் பிரிவினையும் உண்டாகும். சமாதானம் உருக்குலைந்து போய்விடும். அப்படியானால் அத்தைகைய ஐக்கியத்தை நடைமுறைபடுத்துவது இன்றைய உலகில் சாத்தியாமா? சற்று சிந்திப்போம்.

**சமாதானக் காரணர்**



இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது உலகம் தரக்கூடாத சமாதானத்தை நான் உங்களுக்குத் தருகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குத் தருகிறேன் என்று கூறினார். இயேசுவை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டால் சமாதானம் நமக்கு நிச்சயம் கிடைக்கும். அதாவது நம் ஒவ்வொருவருக்கும் இயேசுகிறிஸ்துவுடன் சரியான ஐக்கியம் உண்டெனில் சமாதானம் தானாக வரும். இயேசுவோடு ஐக்கியமாயிருக்கும் ஒருவன் இயேசுவை பிரியப்படுத்துவதே முதற்கடமையாக கொள்வான். அப்படியெனில் இயேசுவின் அன்பு அவன் உள்ளத்தில் இருக்கும். அப்போது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, தாழ்மை, பொறுமை என அனைத்து ஆவியின் கனிகளும் அவனிடத்திலிருந்து வெளிப்படும். அவ்வாறு இருக்கும்போது, பிரிவினையைக் கொண்டு வருகிற பெருமை, கோபம், பகை, பொறாமை, அன்பு தாழ்ச்சி என அனைத்து வகையான தீய குணங்களும் பறந்தோடிப்போகும். ஆவியானவர் உள்ளத்தில் இருக்கும்போது இத்தீய சக்திகளுக்கு இடமேயில்லை. எனவே, இயேசுவோடு ஐக்கியமாய் இருப்பவனை சுற்றியுள்ள வளையத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் ஐக்கியமாய் இருப்பர். சமாதானக் காரணர் ஏற்படுத்தும் ஐக்கியத்தை யாராலும் பிரிக்க முடியாது.

**ஆசா ஓர் உதாரணம்**

அபியாவின் குமாரன் ஆசா யூதாவின் ராஜாவான பொழுது, தன் முன்னோர்கள் செய்த தவறை செய்யவில்லை. அந்நிய தேவர்களின் பலிபீடங்களையும் மேடைகளையும் அகற்றினான். சிலைகளை உடைத்துப் போட்டான். விக்கிரகத் தோப்புகளை வெட்டினான். கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியும், கற்பனையின்படியும் செய்யவும் யூதாவுக்கு கற்பித்தான். அவனுக்கு முன்பாக ராஜ்யம் அமரிக்கையாயிருந்தது (2நாளா.14:3-6). கர்த்தரோடு ஐக்கியம் கொண்டிருந்தபடியால், ஆசாவுக்கு எதிராக வந்த எத்தியோப்பியரை கர்த்தர் முறியடித்தார். ஆசாவும் ஜனங்களும் முழு இருதயத்தோடு கர்த்தரைத் தேடினதால், சுற்றுபுறத்தாரால் யுத்தம் இல்லாதபடி, கர்த்தர் அமைதியைக் கட்டளையிட்டார்(2நாளா.15:15). ஆசாவும் அவன் நாட்டினரும் அமைதியாய் சமாதானத்துடன் வாழ்ந்ததின் இரகசியம், ஆசாவுக்கும் கர்த்தருக்கும் இருந்த ஐக்கியமாகும்.



நம் தேவனுக்கு கொடுக்கப்பட வேண்டிய இடத்தை ஆக்கிரமித்துள்ள நம்முடைய ஆணவமோ, பதவியோ, செல்வமோ, உறவோ எதுவாயிருந்தாலும் அது தகர்க்கப்பட வேண்டும். கர்த்தரைத் தேடி அவருக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். தேவனோடு ஐக்கியம் கொள்ள இது முதற்படியாகும். அப்படி நாம் தேவனை சார்ந்து அவருடன் ஐக்கியமாயிருக்கும்போது எந்த ஒரு எதிரியும் நம்மை அணுக முடியாது.

அதே ஆசா ராஜா தனது 36-வது வருட அரசாட்சியில் இஸ்ரவேலின் ராஜா தன்னை எதிர்த்து வந்தபோது, கர்த்தரை சாராமல் சீரியா ராஜாவின் உதவியை நாடிச் சென்றான் (2நாளா.16:2-4). அதினால் கர்த்தர் சினங்கொண்டு ஞானதிருஷ்டிகாரனாகிய அனானி மூலம், ஆசாவுக்கு வரப்போகும் தண்டனையைக் குறித்து கூறுகிறார். அதைக் கேட்டு, மனந்திரும்பி கர்த்தரிடம் மன்னிப்பு கேட்பதற்கு பதிலாக, அனானியை சிறையில் அடைத்தான். கர்த்தரிடமிருந்த ஐக்கியத்தை இழந்ததினாலே, தன் சுயசித்தத்தின்படி செய்து, முடிவில் காலில் வியாதி கண்டு மரித்துப்போனான் ஆசா.

தேவனோடுள்ள ஐக்கியம் சரிவர இல்லையெனில் ஆசாவைப் போல நாமும் சமாதானத்தை இழந்து அழிவை சந்திக்கக் கூடும். தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. எனவே நாம் மதியற்றவர்களாய், உலகத்தையும், உலகத்தாரையும் சாராமல், கர்த்தரை நம்பி, அவரைச் சார்ந்து வாழ்வோம். அப்போது தேவ சமாதானம் நம்மையும் நம்மை சார்ந்த அனைவரையும் ஐக்கியத்துடன் காத்துக்கொள்ளும்.

**ஜெபசீலி ஆசீர்**

# இணைந்து ஊழியம் செய்த எயோதியாள்/சிந்திகேயாள்

இவர்களைக் குறித்து பிலி. 4:2-3,அப்.16:13-15 & 17:12 -ல் காணலாம். இவர்கள் இருவரும் பிலிப்பி பட்டண ஆற்றங்கரையில் லீதியாளோடும், மற்றும் வேறு சில பெண்களோடும், பவுலின் மூலம் நற்செய்தியைக் கேட்டு இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டவர்கள், பவுலின் ஆவிக்குரிய பிள்ளைகள் என்றும் சொல்லலாம். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின், மற்ற பெண்களுக்கு நற்செய்தி சொல்வதிலும், சபையை உருவாக்குவதிலும், சபை வளர்ச்சிக்கும் உதவியாக இருந்திருக்கிறார்கள். இவர்கள் செய்த நற்செய்திப் பணி பவுலாலும், மற்ற விசுவாசிகளாலும் பாராட்டப்பட்டது. ஆயினும் இவர்கள் இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடுகளும், வாக்குவாதமும், பிரிவினையும் ஏற்பட்டு பிலிப்பி பட்டண மக்களின் ஒற்றுமை கெட்டுப்போயிற்று. பவுல் அவர்களைக் கண்டித்து கர்த்தருக்குள் ஒரே சிந்தையாய் இருக்க அறிவுரையும் கூறினார்.

நம்முடைய வாழ்க்கையிலும் கிறிஸ்து இயேசுவிலிருக்கிற சிந்தை காணப்பட வேண்டும். கிறிஸ்துவின் சிந்தை நம்மை ஒருமனப்பாட்டு ஒற்றுமைக்குள் வழிநடத்தும். முடிந்தவரை ஒற்றுமையுடனும், அன்புடனும் கர்த்தருடைய மகிமைக்காய் வாழவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் நம்மைவிட மேன்மையானவர்களாக கருத வேண்டும். சிலர், அவர்களுடைய ஊழியத்தில் வளர்ச்சி ஏற்பட்டால் உடனே மற்றவர்களை விட நம்மை பெரிதாக எண்ணுகிறார்கள். கர்த்தர் தந்த கிருபை என்று உணர்ந்து தாழ்மையோடு இருக்க வேண்டும். மற்றவர்களை குறைவாக எண்ணக்கூடாது. எல்லாருக்காகவும் தான் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்து இரத்தம் சிந்தினார். பிலி.2:4-ன் படி தனக்கானவைகளைக் குறித்து கவனமாய் இருப்பது போல, பிறனுக்கானவற்றையும் சிந்தித்து செயல்பட வேண்டும். பிறர் நலன்

கருதும்போது ஒற்றுமையும், அன்பும் வளரும். இதுதான் கிறிஸ்து இயேசுவின் சிந்தை. இப்படிப்பட்ட சிந்தை நம்மை ஆட்கொள்ளும்போது நமக்குள்ளே ஒரு மனமும், ஐக்கியமும் ஏற்படும். சபையும் வளர்ந்து பெருகும். அதிகமான ஜெபம், தாழ்மை, வேத வசனத்தின் ஆலோசனைகள் (பிலி. 2:14) ஆகியவை நமக்குள் ஏற்படும். கருத்து வேறுபாடுகளை சரிசெய்து, பிலி.3:16-ன் படி ஒரே சிந்தையாய் வாழ வழிச்செய்யும்.

எயோதியாள், சிந்திகேயாள் இருவரின் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்தன. நம்முடைய பெயர்களும் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட வேண்டுமானால், நாமும் ஐக்கியமாய், உண்மையாய், நற்செய்தி பணி செய்கிறவர்களாய் காணப்பட வேண்டும். இரண்டு மூன்று பேர் கர்த்தருடைய நாமத்தினாலே கூடும்போது தேவ பிரசன்னம் நம்மை சூழ்ந்து கொள்ளும். நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும். ஒருமனதோடு பிரயாசப்படும்போது மிகுதியான பலன் கிடைக்கும்.

நாமும் முடிந்தவரை ஒரே சிந்தையாய் வாழ்ந்து, ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள தேவாதி தேவன் நமக்குத் துணை புரிவாராக!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

## அக்டோபர் மாத தலைப்பு

# திருச்சபை [Church]

Dear Children,



Welcome back. The theme for the month of September is – "**UNITY**".

God made us all unique, but He created us in His image and loves each and every person.

Jesus died for all of us, and when we consider others, we should remember that they are worthy of Christ's love and sacrifice.

God wants us to care for one another and remember that on the inside, we are all alike.

We identify ourselves as children of God, the ruler and creator of the universe.

**FIVE WAYS WE CAN APPROACH ONE ANOTHER ON THE PATH TOWARD UNITY…**

**(1) Recognize the need for unity;**


**(2) Start from thinking about being united;**

**(3) Proceed one person at a time, with love;**


**(4) Don't make yourself the measure of truth. Truth is a person. It is Jesus;**

**(5) Embrace the cross, and let Jesus' love transform divisions into one.**

## SAYING IT WITH PICTURES..





May the God who gives endurance and encouragement give you a spirit of unity among yourselves as you follow Christ Jesus, – ROMANS 15:5 NIV




Accept one another, then, just as Christ accepted you, in order to bring praise to God. – ROMANS 15:7 NIV

# PAUL'S LETTERS TO THE EARLY CHURCH




The apostle Paul travelled extensively to encourage the early church.

The books of Romans; 1st and 2nd Corinthians; Galatians; Ephesians; Philippians; Colossians; 1st and 2nd Thessalonians; 1st and 2nd Timothy; Titus; and Philemon are traditionally attributed to him.


**Galatians**: No sinner saved through Jesus Christ stands under the Law, but are justified by faith alone.

**Ephesians**: God brings all believers together under one head—Jesus Christ.

**Philippians**: Rejoice in the Lord always.

**Colossians**: Jesus Christ is the Head of the church.

**1st Thessalonians**: All believers will one day live together with Him.



All Scripture is God-breathed and is useful for teaching, rebuking, correcting and training in righteousness, so that the man of God may be thoroughly equipped for every good work. — 2 Timothy 3:16–17 NIV

**2nd Thessalonians**: One day Christ will return as King. We should not be weary of doing good.

**1st Timothy**: The church needs to lead a godly and holy life, caring and loving one another.

**2nd Timothy**: Each of us should strive to fight the good fight; finish the race and keep their faith.


**Titus:** Jesus came to save sinners—not by works—but by grace.

**Philemon**: Accept fellow believers as a brother in christ.

## TINY TOTS SECTION


### COLOR IN...




# LOVE OUR NEIGHBORS



**The Bible says in 1st Corin. – "Let there be no divisions among you…" Circle 9 things that do not belong in the Church.**

**The Family in The Maze Wants to Be United. Find The Way for Each Family Member to Get to The Same Path, and to JESUS the HEAD OF THE HOUSE AND CHURCH!**



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION

1. Who were Paul and Barnabas to remember? (Galatians 2:10)

a. Lot's wife
b. The apostles
c. The poor
d. The saints at Jerusalem

2. What do you cry out when God sends the Spirit into your hearts? (Galatians 4:6)

a. Glory to God
b. Abba Father
c. Amen
d. Hallelujah

3. By what were you saved? (Ephesians 2:8-9)

a. Obedience
b. Works
c. church membership
d. Grace

4. Who is the chief cornerstone? (Ephesians 2:20)

a. Jesus Christ
b. Paul
c. Stephen
d. John the Baptist

5. Of what does Paul say there is one? (Ephesians 4:4-6)

a. Baptism
b. Faith
c. Lord
d. All of the above

6. Who is the image of the invisible God? (Colossians 1:13-15)

a. Adam
b. All men
c. Jesus
d. All of the above

7. What should we do always? (Philippians 4:4)

a. Rejoice
b. Witness
c. Pray
d. Attend church

8. What has God called us unto? (1st Thessalonians 4:7)

a. Wisdom
b. Holiness
c. Salvation
d. Repentance

9. When Jesus comes, who will be with him? (2nd Thessalonians 1:7)

a. Four beasts
b. The 144,000
c. His mighty angels
d. 10,000 saints and 24 elders

10. What should be done "First of all? (1st Timothy 2:1)

a. Prayer
b. Fasting
c. Believing
d. Reading the Word of God

11. All Scripture is given by _______________ of God? (2nd Timothy 3:16)


a. Apostles
b. Inspiration
c. Holy men
d. Prophets

12. Who ministered to Paul while he was in prison? (Philemon 13)

a. Luke
b. Philemon
c. Onesimus
d. Timothy

## The Motto of our church- the CSI Tamil Parish, Abu Dhabi is –

### "THAT THEY ALL MAY BE ONE..."



# We must use our spiritual gifts to build up the church, as one body in Jesus Christ!!

## Parts of the Body

It is important for people with different spiritual gifts to work together in the church, just like the different parts work together in your body.


Read 1 Corinthians 12:15-16 and circle each body part that is mentioned.


hair


eye


ear


mouth


hand


foot

# Spiritual Gifts

Spiritual gifts are special abilities given to Christians to help do the work of the church.

## Discover Spiritual Gifts

Use the code to find some examples of spiritual gifts.

___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
◢ ◤ △ ▲ ▼ ◀ ▶ ▷ ▽

to speak God's message in sermons

___ ___ ___ ___ ___ ___ ___ ___
◥ △ ▲ ▼ ◀ ▶ ▷ ▽

to help other people learn from the Bible

___ ___ ___ ___ ___ ___
▽ ▶ ↺ ▶ ▷ ▽

to share money and other things to help in God's work

___ ___ ___ ___ ___ ___ ___
◀ △ ◁ ◢ ▶ ▷ ▽

to notice people's needs and try to meet them

___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
△ ▷ ▼ ◣ ↻ ◤ ▲ ▽ ▶ ▷ ▽

to see other people's abilities and encourage them to use them

___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
◣ ◤ ▽ ▲ ▷ ▶ ⟲ ▶ ▷ ▽


to help people work together to do God's work by assigning a job to each person

Code:

| ▲ | ▼ | △ | ▽ | ◀ | ▶ | ◁ | ▷ | ◣ | ◢ | ◤ | ◥ | ↻ | ↺ | ⟲ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | C | E | G | H | I | L | N | O | P | R | T | U | V | Z |

# NOTICE THE UNITY OF THE BIBLE.

# IT IS MIRACULOUS!





The Bible was written over a period of 1,500 years.

- The Bible was written by over 40 different authors (Among them were kings, military leaders, peasants, philosophers, fishermen, tax collectors, poets, statesmen, musicians, scholars and shepherds.)
- The Bible was written in many different places, at many different times and by people experiencing many different moods.
- The Bible was written on three continents: Asia, Africa and Europe.
- The Bible was written in three different languages: Hebrew, Greek and Aramaic.
- The Bible is written with many different literary styles: Prose, poetry, historical narrative, romance, law, biography, parable, allegory and prophecy.
- The Bible addresses hundreds of difficult issues without a single contradiction.
- The Bible is a book of great diversity, yet, in spite of this, it unfolds a single continuous story, and it does so without ever contradicting itself.

And that one overarchiing theme and continuous story is the plan of Salvation for lost sinners which is revealed from Genesis to Revelation.

It is the road that leads to faith in Jesus Christ as the only hope for Heaven.




They looked forward to Christ in the Old Testament.

They looked at Christ in the Gospels.

We look back to Christ since the Book of Acts and all the way until now in the New Testament Church.

## The Giant Redwood Trees



The huge redwood trees in California are considered the largest living things on earth and the tallest trees in the world.

But the redwoods actually have a very shallow system of roots. So how do they get so big and stand so long?

Although it's a shallow root system; they all intertwine; they are locked to each other.

So, when the storms come and the winds blow, the redwoods stand. And it's because they don't stand alone, for all the trees support and protect each other.

The same is true for the church. How will we stay strong and be able to withstand the storms? **By working together. If we do not stand together then we will surely fall apart.**

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below...

1. The theme for the month of September is: ____________________.
2. Romans 15:5 says - ______________________________________________________

   ______________________________________________________________________

   ______________________________________________________________________
3. The apostle Paul wrote the following New Testament books - ________________

   ______________________________________________________________________

   ______________________________________________________________________
4. The motto of our CSI Tamil Parish, Abu Dhabi is - ___________________________
5. List 5 spiritual gifts - _____________________________________________________

   ______________________________________________________________________
6. The bible was written over a period of _____________________ years.
7. The one overarching theme in the bible is ________________________________

   ______________________________________________________________________

Children let us strive to keep this unity in our hearts, and in our church. Remember we are one body in Jesus Christ.

**God bless,**
**Mrs. Briliya Jeyaseelan.**

# வேத வினாக்கள்

**ஏசாயா - 39 – 66 அதிகாரங்கள்**
**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

1. என்றென்றைக்கும் நிற்பது எது?
2. வெட்கத்துக்கு பதிலாக என்ன வரும்?
3. மோசேயை கர்த்தர் யாராக பார்த்தார்?
4. எதை உதறிவிட்டு எழுந்திருக்க வேண்டும்?
5. இஸ்ரவேலுக்கு ஈடாக எந்தெந்த தேசங்களை கர்த்தர் கொடுத்தார்?
6. கர்த்தர் எதைப் பேசி எதை அறிவிக்கிறார்?
7. தேவன் வெறுக்கிற பலி எது?
8. நீதி எப்படி இருக்கிறது?
9. கர்த்தர் யாரைக் குறித்து 'அவன் என் மேய்ப்பன்' என்கிறார்?
10. யார் சீயோனுக்கு வருவார்கள்?
11. தேவன் எதை உடைத்து, எதை முறித்து, எவைகளை நமக்குக் கொடுப்பார்?
12. கர்த்தர் நம்மை நோக்கிப் பார்க்க என்ன செய்ய வேண்டும்?
13. விக்கிரகங்களை உருவாக்குகிறவன் எதை மேய்கிறான்?
14. கர்த்தருடைய வாய் சொல்லும் எதினால் நீ அழைக்கப்படுவாய்?
15. எப்போது ஆடுகள் மவுனமாயிருப்பது போல இரட்சகர் இருந்தார்?
16. எசேக்கியா ராஜாவிடம் நீர் பிழைக்க மாட்டீர், மரித்துப் போவீர் என்று சொல்வதாக சொன்ன தீர்க்கதரிசி யார்?
17. எப்படிப்பட்டதாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே வழக்காடுகிறவனுக்கு ஐயோ?
18. யாருக்கு, எவைகள் சடிதியாக ஒரேநாளில் வரும்?
19. யார் மேன்மை பாராட்டுவார்கள்?
20. வெளி.12:12-க்குப் பொருத்தமான வசனம் என்ன?
21. கர்த்தரிடத்தில் மாத்திரம் எவைகள் உண்டென்று அவனவன் சொல்லி அவரிடத்தில் வந்து சேருவான்?
22. யாருடைய பாதங்கள் அழகாயிருக்கின்றன?
23. இஸ்ரவேல் புத்திரரை அல்லாத யாரையெல்லாம் கர்த்தர் நேசிப்பதை ஏசாயா 56-ல் வாசிக்கிறோம்?
24. சுவிசேஷகன் உரைக்க வேண்டியது என்ன?
25. தேவன் எசேக்கியா ராஜாவுக்கு எத்தனை வருடங்கள் கூடுதலாக ஆயுசு நாட்களைக் கூட்டிக் கொடுத்தார்?
26. நிரப்புக: என் தாசனாகிய யாக்கோபு, நான் தெரிந்துகொண்ட ______________ பயப்படாதே.
27. கர்த்தர் யாருக்கு ஆறுதல் செய்வார்?
28. கர்த்தர் எங்கு வீற்றிருக்கிறார்?
29. ஏசாயா 59:16-க்கு பொருத்தமான ஏற்ற வசனம் என்ன?
30. எப்போது கர்த்தரைத் தேடி, கூப்பிட வேண்டும்?

## ஜூலை & ஆகஸ்டு மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் ஏசாயா 22 – 38 |
|---|---|---|
| 1 | சமாதானமும், என்றுமுள்ள அமரிக்கையும் சுகமும் | 32:17 |
| 2 | பெலவந்தரின் ஆரவாரம் | 25:5 |
| 3 | லிவியாதான் என்னும் நீண்ட பாம்பு | 27:1 |
| 4 | அரியேல் நகரம் | 29:1 |
| 5 | கர்த்தருடைய கட்டளையில்லாமல் இந்தத் தேசத்தை அழிக்க வந்தேனோ? இந்தத் தேசத்துக்கு விரோதமாய்ப் போய் அதை அழித்துப்போடு என்று கர்த்தர் என்னோடே சொன்னார் என்று சொன்னான். | 36:10 |
| 6 | தரிசனமெல்லாம் | 29:11 |
| 7 | மரித்தோரைப் பூமி புறப்படப் பண்ணும் | 26:19 |
| 8 | சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் ஆளுகைசெய்வதால் ………… சூரியன் நாணமடையும் | 24:23 |
| 9 | பெரும்பாதையான வழி, கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் | 35:8 |
| 10 | கர்த்தருடைய புஸ்தகத்திலே | 34:16 |
| 11 | நினிவேயில். அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோவிலிலே பணிந்துகொள்ளுகிறபோது அவன் குமாரராகிய அத்ரமலேக்கும், சரேத்சேரும் அவனை பட்டயத்தினால் வெட்டிப் போனான். | 37:38 |
| 12 | கர்த்தருடைய சத்தத்தினாலே | 30:31 |
| 13 | எருசலேமில் | 30:19 |
| 14 | நீதிமானுடைய பாதை | 26:7 |
| 15 | கொடூரமான ஜாதிகளின் நகரம் | 25:3 |

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் ஏசாயா 22 – 38 |
|---|---|---|
| 16 | மறக்கப்பட்டிருந்த …….. எழுபது வருஷங்களின் முடிவிலே | 23:17 |
| 17 | மோவாப் | 25:10 |
| 18 | உளுந்து, சீரகம், கோதுமை, வாற்கோதுமை, கம்பு | 28:25 |
| 19 | நியாயத்தின் ஆவியாக | 28:6 |
| 20 | அமரிக்கையும் நம்பிக்கையும் | 30:15 |
| 21 | கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது பட்டயத்தால் தண்டிப்பார் | 27:1 |
| 22 | தேசம் அனைத்தின் மேலும் நிர்ணயிக்கப்பட்ட சங்காரத்தின் செய்தியை | 28:22 |
| 23 | கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக் கட்டி, அதின் அடிக்காயத்தைக் குணமாக்கும் நாளிலே | 30:26 |
| 24 | பேதையராயிருந்தால் கூட பிரவேசிக்கலாம் | 35:8 |
| 25 | ஆம் | 37:4 |
| 26 | எசேக்கியா ராஜா அரசாண்ட பதினாலாம் வருஷத்திலே | 36:1 |
| 27 | இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள். மூன்றாம் வருஷத்திலே விதைத்து, அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள். | 37:30 |
| 28 | சேனைகளின் கர்த்தர் | 31:5 |
| 29 | உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு | 30:19 |
| 30 | பார்வோனுடைய பெலன் உங்களுக்கு வெட்கமாகவும் எகிப்தினுடைய நிழலொதுக்கு உங்களுக்கு இலச்சையாகவும் இருக்கும். | 30:3 |

## ஜூலை & ஆகஸ்டு மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs.Priya Ranjith
2. Mrs.Jeevamoni Joseph
3. Mrs. Jebaseeli Asir
4. Mrs. Manuel Sarah Foulkes Moore
5. Mrs. Annie Max
6. Mrs. Febell Jeevagi Thomas
7. Mrs.Nithya Prince
8. Mr. Emmanuel Vanya
9. Mrs. Sheeba Merlin
10. Mrs. Sharmila Rajesh
11. Mrs.Jenila Gnanaraj
12. Mrs.Subija Jino
13. Mrs.Annie Vigin
14. Mrs. Sheneega Stanely
15. Mrs.Ajita Ebi
16. Mrs.Jenis Trison
17. Mrs.Helen Sharmila
18. Mrs. Percia David
19. Ms.Persis Seljah

## Children who answered July & August - 2022 Quiz

1. Geoffrey Jerome David
2. Keren Grapeson
3. Abner Theophiilus Grapeson
4. Aadhav Steve Matthew
5. Gabrilyn Hannah
6. Jerilyn Pushpam Nelson
7. Jonathan Geosper David
8. Evelyn Gracia
9. Johan Sam Manuel
10. Joha Anit Manuel
11. Amy Jazzlyn
12. Jevlyn Ana
13. Janessa Max
14. Andrew Jones Arun
15. Jen Scudd
16. Jim Scott
17. Juanita Carys.J
18. Johanan Paul Jino
19. Joanna Paul Jino
20. Adelyn Victoria Jeyaseelan
21. Abryan Gabriel Jeyaseelan
22. Shawn Samuel
23. Sheena Samuel
24. Leonel I.J. Stalin
25. Linuel I.J. Sherwyn
26. Jessica Eban
27. Hadriel Adventier
28. Giana Elin
29. Liana Erin
30. Sam Jesvin
31. Jesse Grace
32. Jeya Jehosheba Mahear
33. Jeya Joshua Maher
34. Darion Lemuel

***Note :*** Submit the answers of Bible Quiz to Pastor uncle on or before 25th of every month.



## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்

*இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி*
*14-06-1912 – 20-01-1997*

**உறுதியான அழைப்பு**

முதல் மாநில முகாமின் இரண்டாம் கூடுகை நடக்கவிருக்கும் அறைக்குள் நுழைந்தார் ஈடித். அங்கத்தினர் அவரை அன்புடன் அமரச்செய்தனர். ஆனால் யாரும் அங்கு நிலவிய அமைதியைக் கலைக்காமல் ஒரு சில மணித்துளிகள் மிக மிக அமைதியாய் அமர்ந்திருந்தனர். தெய்வீக சமாதானத்தால் வலுப்பெற்ற ஈடித்தும் அமைதி ததும்ப அமர்ந்திருந்தார். கேள்வி நேரமோ, அறிக்கை நேரமோ அல்ல அந்நேரம், அந்த செயற்குழுவிற்கும் ஈடித்திற்கும் ஏன் நம் பாரதத்துக்குமே மிக முக்கியமான மணித்துளிகள் அவை. நீயா நானாவென்று தயங்காமல் ஒட்டுமொத்தமாக அனைவரும் ஏகக் குரலில் ஈடித்தை இந்தியாவிற்கு தெய்வத் தூதுவராக நியமித்துவிட்ட தீர்மானத்தைத் தெரிவித்தனர்.

"அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்". இது வானத்துக்கும், பூமிக்கும், நதிக்கும், கடலுக்கும் மட்டுமல்ல. மனித உள்ளங்களுக்கும் உண்டான கட்டளை. மின்னசோட்டா ஜெபக்குவின் இரண்டாவது மிஷனரி ஈடித் பெர்ல் மார்கன். அவரது பணித்தளம் பரந்து விரிந்த பாரதம். "வழியில் உன்னைக் காக்கிறதற்கும் நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னை கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்" (யாத்.23:20) என்ற வசனத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். இவ்வாக்கின் மூலம் தன்னை போதித்து வழிநடத்திய தேவனுக்கு நன்றி செலுத்தினார். அன்று அவர் காலடி மண்ணிலல்ல, விண்ணில் வலம் வந்தது.

**போர்க்கப்பலில் பயணம்**

என்று தன்னை மிஷனரியாக அனுப்பப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டாரோ, அன்று முதல் தன் கைவசமிருந்த பொறுப்புகளை ஏற்றவர்களிடம் ஒப்படைப்பதற்கான திட்டங்களை மிகக் கவனமாகத் தீட்டினார் ஈடித். "உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி" (2தீமோ.2:2) என்ற வேதவாக்கை உண்மையாய்க் கடைபிடிப்பவர் ஈடித். 1944 ஏப்ரல் முதல் 1945 ஏப்ரல் வரை மாநிலம் முழுவதும் பரவியிருந்த ஜெபக்குழந்தைகளை நேரில் சென்று சந்தித்து பிரியாவிடை
பெற்றதோடு பொறுப்புகளையும் உண்மையுள்ளவர்களிடம் ஒப்படைத்தார். என்று இந்தியாவுக்கு அனுப்பப்படும் மிஷனரியாக அங்கிகரிக்கப்பட்டாரோ, அன்றே மனதில் இந்திய குடிமகளான பரவசம் அவருக்கு.

சூறாவளிப் பயணம் முடியுந்தருவாயில், "பத்து நாளுக்குள் நீ நியூயார்க்கில் இருக்க வேண்டும்" என்ற செய்தி தந்தி மூலமாக வந்தது. அப்போது ஈடித் அவர் வீட்டை விட்டு சற்று தொலைவிலுள்ள கான்சாஸ் என்ற ஊரில் இருந்தார். "விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசாயா 28:16) என்ற வசனம் விவரிக்கும் நிதானம் அவர் வாழ்வில் மிகப்பொருத்தமானதாக இருந்து வந்ததால், ஆயத்தம் செய்ய அவகாசமில்லாத போதிலும் அமரிக்கையோடு செயல்பட்டார். செய்யவேண்டிய ஆயத்தம் அதிகம். ஒட்டுமொத்தமாக தாய்நாட்டை விட்டுப் புதிய தேசம் செல்லவேண்டும்; குடும்பத்தை விட்டு தனியே செல்ல வேண்டும்; பழகிய முகங்களை மறந்துவிட்டு புதிய முகங்களை நாடிச் செல்ல வேண்டும்; இதுபோன்ற அலையலையாய் எழும் உணர்வோட்டம் அவரை அடித்துச் செல்லவில்லை. உணர்ச்சியெனும் சிறகடித்து பகற்கனவில் நேரத்தை விரயமாக்கவுமில்லை ஈடித். இன்பப் பெருக்கெடுக்கும் நேரத்திலும் முடிக்க வேண்டிய வேலைகளை ஒவ்வொன்றாய் கச்சிதமாய் முடித்தார். பகல் முழுவதும் பொறுப்பாய் ஓடியவர் இரவையோ பரமன் பாதத்தில் பரவசமாய்ப் பகலாகவே கழித்தார்.
மாநில முகாமில் ஏற்பட்ட திருப்பம்

- தொடரும்

கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு

## பாடல் பிறந்த கதை

**பாமாலை 355 – கர்த்தாவின் அற்புத செய்கை**
**(God moves in a mysterious way)**

1. கர்த்தாவின் அற்புதச் செய்கை
புத்திக் கெட்டாததாம்;
பொங்கு கடல் கடும் காற்றை
அடக்கி ஆள்வோராம்.



2. தம் வல்ல ஞான நோக்கத்தை
மா ஆழமாகவே
மறைத்துவைத்தும், தம் வேளை
முடியச் செய்வாரே

***'கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும்... என்றைக்கும் காப்பார்'. சங்கீதம் 121:8***

'உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆகையால் பயப்படாதிருங்கள்' (லூக்கா 12:7) என்று ஆண்டவராகிய இயேசு திருவுளம் பற்றியிருக்கிறார். வாழ்க்கையில் வெறுப்புற்று, மன அமைதி குலைந்து, நாம் அடிக்கடி சொந்த சித்தத்தை நிறைவேற்ற முயற்சிக்கிறோம். ஆயினும் அது ஆண்டவருடைய சித்தமாயிராவிட்டால் நிறைவேறுவதில்லை என்பதை எப்போதும் காண்கிறோம். தனது வாழ்க்கையில் ஏற்பட்ட அநேக ஏமாற்றங்களையும், மனவேதனையையும் தாங்க முடியாத ஒரு பக்தன், ஆபிரகாமைத் தன் மகனைப் பலியிடக் கடவுள் ஏவினது போல, தன்னையே பலியிடக் கடவுள் ஏவுகிறார் என நம்பி, தற்கொலை செய்ய முயற்சித்தார். ஆனால் கடவுள் ஓர் அற்புத செய்கையினால் அவரது திட்டத்தை செயல்படாமல் தடுத்துவிட்டார்.

வில்லியம் கூப்பர் (William Cowper) என்னும் ஆங்கிலக் கவிஞர் சிறந்த கடவுள் பக்தியும் வேத அறிவும் உள்ளவர். ஆனால் அவர் வாழ்க்கையில் பல ஏமாற்றங்கள் உண்டானதால், தாங்கமுடியாத மனவேதனையடைந்தார். இதன் விளைவாக அவர் மனநிலை மாறி, பைத்தியம் பிடித்தவர் போலானார். இவ்வேதனைகளுக்கு முடிவுகாண, தற்கொலை செய்துகொள்வதே நல்லது எனத் தீர்மானித்தார். அதற்காக லண்டன்மாநகருக்கருகில் ஓடும் தேம்ஸ் நதியில் விழுந்துவிட எண்ணங்கொண்டு, ஒரு வண்டியில் ஏறி, வண்டியோட்டியை தேம்ஸ் நதிக்கரைக்கு ஓட்டச்சொன்னார். வண்டியில் ஏறிய சிறிது நேரத்தில் சுற்றுப்புறமெல்லாம் அடர்த்தியான மூடுபனி மூடிக்கொண்டது. பாதை தெரியாமல் வண்டியோட்டி வண்டியைப் பல வழிகளில் ஓட்டிச் சென்றான். வெகுதூரம் சென்றபோதிலும் குறிப்பிட்ட இடம் சேரமுடியாதலால், வண்டியை நிறுத்தி, பிரயாணியைப் பலவந்தமாகக் கீழே இறக்கிவிட்டான். கூப்பர் இருள் சூழ்ந்த தெருவில் அங்குமிங்கும் அலைந்து, கடைசியில் தன் வீட்டு நடையிலேயே வந்து நின்றார். வீட்டுக்குள் சென்று, நடந்த சம்பவத்தை சிறிது நேரம் சிந்தித்ததில், தன் உயிரைக் காப்பாற்றவே கடவுள்

*மூடுபனியை அனுப்பினார் என்பதை உணர்ந்தார். உடனே மேஜையில் உட்கார்ந்து, 'கர்த்தாவின் அற்புத செய்கை புத்திக்கெட்டாததாம்' என்னும் பாடலை எழுத ஆரம்பித்து, சிறிது நேரத்தில் எழுதி முடித்தார். வாழ்க்கையில் சிக்கலான நிலைமைகளை அனுபவிக்கும் மக்களுக்கு மிகுந்த தைரியத்தையும் மனசாந்தியையும் இப்பாடல் அளிக்கிறது.*

*வில்லியம் கூப்பர் 1731ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் தேதி இங்கிலாந்தில் பெர்க்காம்ஸ்டெட் நகரில் பிறந்தார். அவரது தந்தை இரண்டாம் ஜார்ஜ் மன்னரின் அரண்மனை குருவாக இருந்தார். இளமைக் கல்வியை முடித்தபின் அவரது விருப்பத்துக்கு மாறாக சட்டப்படிப்புக்கு அனுப்பப்பட்டு, வழக்கறிஞர் ஆனார். பின்பு பாராளுமன்றப் பிரபுக்கள் சபையில் எழுத்தாளராக அமர்ந்தார். பாராளுமன்றத்தில் அங்கத்தினர் முன் நின்று பேசுவதும், வாசிப்பதும் அவருக்கு அச்சத்தை உண்டாக்கியதால், சிறிது காலம் சுய புத்தியை இழந்து மந்த புத்தியினருக்கான மருத்துவமனையில் வைக்கப்பட்டார். இங்கிருக்கும்போது, ஒரு நாள் அங்குள்ள தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு வேத புத்தகத்தை வாசித்து, லாசருவை உயிரோடெழுப்பின ஆண்டவர், தன்னையும் குணமாக்க முடியும் என்னும் விசுவாசத்தைப் பெற்றார். அவரது ஆத்தும நோயைப் போக்கினது மட்டுமல்லாமல் ஆண்டவர் அவரது சரீர நோயையும் குணப்படுத்தினார். அவரது சித்தநோய் குணமானது கண்டு மருத்துவர்கள் வியப்புற்றனர்.*

*மருத்துவமனையிலிருந்து வெளிவந்தபின், முதலில் ஹன்டிங்டன் நகரிலும், பின்னர் ஆல்னே நகரிலும் சில நண்பர்களுடன் வசித்து வந்தார். இங்கு ஆன் நியூட்டன் போதகருடன் நட்புகொண்டு, இருவரும் சேர்ந்து, 'ஆல்னே பாடல்கள்' என்னும் பாட்டு புத்தகத்தை இயற்றினார். இதில் கூப்பர் 67 பாடல்கள் எழுதியுள்ளார். இவரது பாடல்கள் 'கிறிஸ்து சபையின் விலையுயர்ந்த பொக்கிஷங்கள்' எனப் போற்றப்படுகின்றன. கிறிஸ்தவப் பாடல்களைத் தவிர, கூப்பர் ஏராளமான ஆங்கிலச் செய்யுள்களும் எழுதியுள்ளார். அவர் எழுதிய இதர பாடல்களில் நமது பாமாலையில் உள்ளவை:*

*பாவி கேள்! உன் ஆண்டவர் – பாமாலை 283*
*இம்மானுவேலின் ரத்தத்தால் – பாமாலை 331*

*வில்லியம் கூப்பர் 1800ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் தேதி மறுமைக்குட்பட்டார்.*


## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் செப்டம்பர் – 2022



| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 3 | சனி | 5.00 pm – 7.00pm | Junior Church Retreat [Online] |
| 4 | ஞாயிறு | 12.00 noon- 1.00 pm | உபவாச ஜெபக்கூடுகை - ஆயர் இல்லம் |
| 4 | ஞாயிறு | 7.00 pm – 7.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா - திருமதி. பெர்சியா டேவிட் இல்லம் |
| 6 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 9 | வெள்ளி | 9.15 pm – 10.15 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 10 | சனி | Junior Church Memory Verse Competition | |
| 13 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 16 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 18 | ஞாயிறு | 7.00 pm – 7.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம்<br>ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 20 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 23 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 25 | ஞாயிறு | 8.00 pm – 9.00 pm | வாலிபர் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 27 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 30 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | தூய ஆராதனை – St.Andrew's church |


ONLINE BOOKING

ஆலய ஆராதனையில் பங்கு பெற முன்பதிவு செய்வதற்கான இணைப்பு




# BIBLE READING FOR CHILDREN – SEPTEMBER 2022

| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.09.22 | MARK | 10: 24 – 31 |
| 2.09.22 | MARK | 10 : 32 – 34 |
| 3.09.22 | MARK | 10 : 35 – 45 |
| 4.09.22 | MARK | 10 : 46 – 52 |
| 5.09.22 | MARK | 11 : 1 – 6 |
| 6.09.22 | MARK | 11 : 7 – 11 |
| 7.09.22 | MARK | 11 : 12 – 19 |
| 8.09.22 | MARK | 11 : 20 – 26 |
| 9.09.22 | MARK | 11 : 27 – 33 |
| 10.09.22 | MARK | 12 : 1 – 6 |
| 11.09.22 | MARK | 12 : 7 – 12 |
| 12.09.22 | MARK | 12 : 13 – 17 |
| 13.09.22 | MARK | 12 : 18 – 22 |
| 14.09.22 | MARK | 12 : 23 – 27 |
| 15.09.22 | MARK | 12 : 28 – 34 |
| 16.09.22 | MARK | 12 : 35 – 40 |
| 17.09.22 | MARK | 12 : 41 – 44 |
| 18.09.22 | MARK | 13 : 1 – 6 |
| 19.09.22 | MARK | 13 : 7 – 13 |
| 20.09.22 | MARK | 13 : 14 – 18 |
| 21.09.22 | MARK | 13 : 19 – 23 |
| 22.09.22 | MARK | 13 : 24 – 27 |
| 23.09.22 | MARK | 13 : 28 – 31 |
| 24.09.22 | MARK | 13 : 32 – 37 |
| 25.09.22 | MARK | 14 : 1 – 9 |
| 26.09.22 | MARK | 14 : 10 – 15 |
| 27.09.22 | MARK | 14 : 16 – 21 |
| 28.09.22 | MARK | 14 : 22 – 31 |
| 29.09.22 | MARK | 14 : 32 – 36 |
| 30.09.22 | MARK | 14 : 37 – 42 |




# தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - செப்டம்பர் 2022

| தேதி | நாள் | காலை | மாலை |
|---|---|---|---|
| 1 | வியாழன் | நாகூம் 2 : 1 – 13 | யாக். 4 : 9 – 17 |
| 2 | வெள்ளி | நாகூம் 3 : 1 – 10 | யாக். 5 : 1 – 10 |
| 3 | சனி | நாகூம் 3 : 11 – 19 | யாக். 5 : 11 – 20 |
| 4 | ஞாயிறு | ஆபகூக் 1 : 1 – 8 | 1பேதுரு 1 : 1 – 12 |
| 5 | திங்கள் | ஆபகூக் 1 : 9 – 17 | 1பேதுரு 1 : 13 – 25 |
| 6 | செவ்வாய் | ஆபகூக் 2 : 1 – 10 | 1பேதுரு 2 : 1 – 10 |
| 7 | புதன் | ஆபகூக் 2 : 11 – 20 | 1பேதுரு 2 : 11 – 25 |
| 8 | வியாழன் | ஆபகூக் 3 : 1 – 10 | 1பேதுரு 3 : 1 – 11 |
| 9 | வெள்ளி | ஆபகூக் 3 : 11 – 19 | 1பேதுரு 3 : 12 – 22 |
| 10 | சனி | செப். 1 : 1 – 9 | 1பேதுரு 4 : 1 – 10 |
| 11 | ஞாயிறு | செப். 1 : 10 – 18 | 1பேதுரு 4 : 11 – 19 |
| 12 | திங்கள் | செப். 2 : 1 – 15 | 1பேதுரு 5 : 1 – 14 |
| 13 | செவ்வாய் | செப். 3 : 1 – 10 | 2பேதுரு 1 : 1 – 11 |
| 14 | புதன் | செப். 3 : 11 – 20 | 2பேதுரு 1 : 12 – 21 |
| 15 | வியாழன் | ஆகாய் 1 : 1 – 7 | 2பேதுரு 2 : 1 – 11 |
| 16 | வெள்ளி | ஆகாய் 1 : 8 – 15 | 2பேதுரு 2 : 12 – 22 |
| 17 | சனி | ஆகாய் 2 : 1 – 12 | 2பேதுரு 3 : 1 – 9 |
| 18 | ஞாயிறு | ஆகாய் 2 : 13 – 23 | 2பேதுரு 3 : 10 – 18 |
| 19 | திங்கள் | சகரியா 1 : 1 – 10 | 1 யோவான் 1 :1 – 10 |
| 20 | செவ்வாய் | சகரியா 1 : 11 – 21 | 1 யோவான் 2 :1 – 10 |
| 21 | புதன் | சகரியா 2 : 1 – 13 | 1 யோவான் 2 :11 – 20 |
| 22 | வியாழன் | சகரியா 3 : 1 – 10 | 1 யோவான் 2 :21 – 29 |
| 23 | வெள்ளி | சகரியா 4 : 1 – 14 | 1 யோவான் 3 :1 – 12 |
| 24 | சனி | சகரியா 5 : 1 – 11 | 1 யோவான் 3 :13 – 24 |
| 25 | ஞாயிறு | சகரியா 6 : 1 – 15 | 1 யோவான் 4 :1 – 11 |
| 26 | திங்கள் | சகரியா 7 : 1 – 14 | 1 யோவான் 4 :12 – 21 |
| 27 | செவ்வாய் | சகரியா 8 : 1 – 12 | 1 யோவான் 5 :1 – 12 |
| 28 | புதன் | சகரியா 8 : 13 – 23 | 1 யோவான் 5 :13 – 21 |
| 29 | வியாழன் | சகரியா 9 : 1 – 8 | 2 யோவான் 1 : 1 – 13 |
| 30 | **வெள்ளி** | **சகரியா 9 : 9 – 17** | 3 யோவான் 1 : 1 – 14 |

# ஆராதனை பாடல்கள் - செப்டம்பர் 2022

| | |
|---|---|
| | **02-09-22** |
| பாமாலை - 2 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை - 375 | நீரோடையை மான் வாஞ்சித்து |
| கீர்த்தனை – 108 | விசுவாசியின் காதில் பட |
| மங்கள கவிகள் – 2 | கர்த்தர் தந்த ஈவுக்காக |
| | **09-09-22** |
| பாமாலை - 1 | ஆத்மமே உன் ஆண்டவரின் |
| பாமாலை - 239 | இயேசு கற்பித்தார் ஒளி |
| கீர்த்தனை – 333 | எங்கும் புகழ் இயேசு ராசனுக்கே |
| முடிவு கவிகள் – 4 | தெய்வ ஆசீர்வாதத்தோடே |
| | **16-09-22** |
| பாமாலை - 24 | மா மாட்சி கர்த்தா சாஷ்டாங்கம் |
| பாமாலை - 322 | கர்த்தாவை நல்ல பக்தியாலே |
| கீர்த்தனை – 379 | என்னை மறவா இயேசுநாதா |
| பாமாலை – 194 | தூய பந்தி சேர்ந்த கைகள் |
| | **23-09-22** |
| பாமாலை - 212 | பகலோன் கதிர் போலுமே |
| பாமாலை - 158 | இதோ உன் நாதர் செல்கின்றார் |
| கீர்த்தனை – 193 | எல்லாம் இயேசுவே – எனக்கெல்லா |
| கீர்த்தனை – 317 | அனுக்ரக வார்த்தையோடே |
| | **30-09-22** |
| பாமாலை - 15 | அலங்கார வாசலாலே |
| பாமாலை - 172 | சபையின் அஸ்திபாரம் |
| கீர்த்தனை – 352 | மனம் இசைந்து அனைவரும் |
| பாமாலை – 25 | கர்த்தாவே இப்போ உம்மைத் |

## திருமறை பாட ஒழுங்குகள் - செப்டம்பர் 2022

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-09-22 | இருளை ஒளிமயமாக்கும் ஆண்டவர் | ஏசாயா 45:1-8 | அப். 9:1 –12 | மத்தேயு 5:13 - 17 | - |
| 09-09-22 | கல்வி – திருச்சபையின் ஊழியம் | நெகேமியா 8: 1 - 8 | அப். 18:24 –28 | மத்தேயு 5:1 - 12 | 119: 41-48 |
| 16-09-22 | முதியோரை கவனித்து ஏற்றுக்கொள்வது | ஆதியாகமம் 46:28-34 47:1-10 | 1 தீமோ. 5 : 1 - 10 | லூக்கா 2:25-35 | 21 |
| 23-09-22 | மத்தேயு – அப்போஸ்தலர் மற்றும் சுவிசேஷகர் | நீதி. 3 : 13 - 17 | 2 கொரி. 4 :1 - 6 | 1 யோவான் 2 :15 - 17 | 18:1-6 |
| 30-09-22 | தென்னிந்திய திருச்சபை உருவான நாள் - வழிபாட்டில் ஒற்றுமை | நெகேமியா 2:17-20 | ரோமர் 8 :31 -39 | லூக்கா 9 :1 - 6 | 66 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக் குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule (Online) |
|---|---|---|---|
| | ஒருங்கிணைந்த சிறப்பு ஜெபம் | | |
| 06-09-22 | சங்கீதம் | 66 | Madinat Zayed &TCA - 8pm to 9pm |
| 13-09-22 | சங்கீதம் | 67 | Musaafa & Muroor – 8pm to 9pm |
| 20-09-22 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 27-09-22 | சங்கீதம் | 68 | Hamdan / Al Wadha – 8pm to 9pm |

# BIRTHDAY - SEPTEMBER 2022




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 2 | Mrs. | Kishi Frene Mahear |
| 2 | Mr. | Arul Sugirson Samuel. K |
| 2 | Ms. | Nancy Prescilla. N |
| 2 | Ms. | Nissy Lydia. N |
| 3 | Mrs. | Persis Rani |
| 4 | Ms. | Emilyn Cynthia |
| 6 | Mrs. | Helen Hema Geetha |
| 6 | Baby. | Steffi Priscilla |
| 7 | Mrs. | Rathibai Dennison |
| 10 | Mr. | Jeya Mahear |
| 11 | Miss. | Anisha P |
| 11 | Baby. | Pristina Samlyn |
| 12 | Mrs. | Tania Cecil |
| 14 | Mrs. | Maria Elizabeth Samuel |
| 14 | Master. | Jared Isaac Johnson |
| 15 | Master. | Jeremiah Rufus. R |
| 15 | Mrs. | Silvia Annie |
| 15 | Mr. | Nigel Guna Sekar |
| 15 | Mrs. Dr. | Elzi Tephillah |
| 15 | Ms | Persis Seljah Manoharan |

# BIRTHDAY - SEPTEMBER 2022




| Birth Date | Title | Name |
|---|---|---|
| **17** | Mr. | Julious Agastian |
| **20** | Ms. | Sherlin Jerusha Getziyal. J |
| **20** | Master. | Evanjin Vetha Raja |
| **20** | Mr. | Franos. V |
| **20** | Baby. | Ryan Paul Samuel |
| **21** | Mrs. | Sheeba Daniel |
| **21** | Mrs. | Geetha Leslie |
| **22** | Mrs. | D. R. Ajita Steffia Liz |
| **23** | Master. | Edrina. R |
| **24** | Master. | Jonas Brendan. J |
| **24** | Mrs. | Shalmia Selvin |
| **25** | Ms. | Anita Josceline |
| **26** | Mrs. | Hema Alphonsa |
| **27** | Master. | Jaren Joshua |
| **28** | Mr. | Anti Grapeson D |
| **30** | Mr. | Arul Mozhi Varman |
| **30** | Ms. | Angelin Mizpah |
| **30** | Mrs. | Beena Kumari. R |

# WEDDING DAY SEPTEMBER -2022




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 2 | Mr. & Mrs. | Jeya Seelan Gabriel |
| 2 | Mr. & Mrs. | Julian John |
| 2 | Mr. & Mrs. | Prince Trison |
| 3 | Mr. & Mrs. | Samuel John Dinakaran |
| 7 | Mr. & Mrs. | Ranjith Kumar. J |
| 8 | Mr | T. Franklin |
| 9 | Mr. | S. Ebi Tenniyson |
| 10 | Mr. & Mrs. | Elengovan Irwin |
| 10 | Mr. & Mrs. | Leslie Manohar Isaac. W |
| 11 | Mr. & Mrs. | Santhosamani |
| 25 | Mr. & Mrs. | Immanuel Stanly |
| 26 | Mr. & Mrs. | Samuel Jackson Rajan |
| 30 | Mr. & Mrs. | Samuel Vetha Jebaraj |

# NEW ARRIVAL



இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். சங்.127.4a

| S.No. | Baby Name | Parent's Name |
|---|---|---|
| 1 | Athira Thiyagu | Mrs. Alice Jennifer C & Mr, Thiyagu M& |



Bro. Cecil Purushothaman

## Ruwais Church Service after Covid break















UNITY
IN CHRIST